# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

**கொள்கை விளக்கக் குறிப்பு 2016-2017**

**மானியக் கோரிக்கை எண்.15**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## 1. முன்னுரை

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 (1974 – ஆம் ஆண்டு மத்திய அரசு சட்டம் 6)–ன் படி தமிழ்நாடு அரசு 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ஆம் நாள், தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியம் என்ற நிறுவனத்தை உருவாக்கியது. பின்பு 1983 ஆம் ஆண்டு, இந்நிறுவனம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981–ன் கீழ் காற்று மாசு கட்டுப்பாடு கண்காணிப்பு சம்மந்தமான கூடுதல் பொறுப்பும் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு சம்மந்தமான அனைத்து சட்ட அம்சங்களையும் உள்ளடக்கிய சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986–ல் வெளியிடப்பட்டு அதன் கீழ் பல்வேறு அறிவிக்கைகள் மற்றும் விதிகள் வெளியிடப்பட்டதன் காரணமாக வாரியத்தின் பணிகள் மேலும் விரிவடைந்தன. மாநிலத்தின் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முக்கிய பங்கினை ஆற்றிவருகின்றது. தற்போது வாரியமானது மத்திய அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுச்சூழல்

சட்டங்களையும், சட்ட விதிகளையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. அவையாவன:–

- நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974
- நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1977
- காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986
- ஒலி மாசு (முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 2000
- மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2001
- தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டுசெல்லுதல்) விதிகள், 2016
- மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016
- திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016
- பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள்,2016
- மின்னணு கழிவு மேலாண்மை விதிகள், 2016

- கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், 2016

## 2. பணிகள்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981–ன் கீழ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற் கொள்ள வேண்டிய முக்கிய பணிகள் பின்வருமாறு:

- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் குறித்தும், நீர் மற்றும் காற்று மாசினை கருத்தில்கொண்டு தொழிற்சாலைகள் அமைவிடத்தை தேர்வு செய்வது குறித்தும் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;
- வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறை கழிவு நீர், தொழிற்சாலைகள், வாகனங்கள் மற்றும் பிற ஆதாரங்களிலிருந்து காற்று மண்டலத்தில் வெளியேற்றப்படும் வாயுக் கழிவுகள் ஆகியவற்றிக்கு வரையறைகளை விதித்தல்;
- வடிகால் கழிவு நீர், செயல்முறை கழிவு நீர் மற்றும் காற்று மாசு சுத்திகரிப்பு செய்வதற்கு நம்பகமான மற்றும் பொருளாதார சாத்தியமான முறைகளை கண்டறிதல்;

- மண் அமைப்பு மற்றும் பயிர் வகையினை கருத்தில் கொண்டு சுத்திகரிக்கப்பட்ட வடிக்கால் கழிவு நீர் மற்றும் செயல்முறைக் கழிவு நீரை விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்கான உத்திகளை வகுத்தல்;
- காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் **1981–**ன்படி, காற்று மாசு கட்டுப்பாடு பகுதிகள் என அறிவிப்பு செய்ய வேண்டிய பகுதிகளை மாநிலத்தில் கண்டறிதல்;
- காற்று மற்றும் நீர் மாசினை தடுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் பொருட்டு தொழிற்சாலைகள், உற்பத்தி செயல்முறைகள், மாசு கட்டுப்பாடு சாதனங்களை ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடுதல்;
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில அரசு குறிப்பிடும் பிற பணிகளையும் நிறைவேற்றுதல்.

## 3. **நிறுவன அமைப்பு**

வாரியம், மூன்று நிலை அமைப்பாக மாநில அளவில் சென்னையில் தலைமை அலுவலகத்தையும், மண்டல அளவில் மண்டல அலுவலகங்களையும், மாவட்ட அளவில் மாவட்ட அலுவலகங்களையும் கொண்டு மொத்தம் **705**

பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது. அதன்படி இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் 5 மண்டல அலுவலகங்கள் சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ளன. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் 36 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன. சாய மற்றும் சலவைத் தொழில் அதிகமாக உள்ள பகுதிகளில் தொழிற்சாலைகளை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் 2 பறக்கும் படைகள் ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள், நீர் நிலைகள் மற்றும் காற்றின் தன்மை ஆகியவற்றை சிறந்த முறையில் கண்காணிப்பு செய்வதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மொத்தம் 15 சுற்றுச்சூழல் ஆய்வகங்களை மாவட்டங்களில் ஏற்படுத்தியுள்ளது. இதில் சென்னை, சேலம், கோயம்புத்தூர், கடலூர் மற்றும் மதுரை ஆகிய 5 இடங்களில் உள்ள ஆய்வகங்கள் நவீன உபகரணங்களை பயன்படுத்தி, கூடுதல் காரணிகளை பகுப்பாய்வு செய்யும் வசதி கொண்ட, மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களாகும். இந்த 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களும் தேசிய ஆய்வக

அங்கீகார வாரியத்திடமிருந்து தேசிய தரச் சான்றிதழ் பெற்றுள்ளன.

## 4. **இசைவாணை மேலாண்மை**

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974, பிரிவு **25–**ன் படி தொழிற்சாலைகள், வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக்கழிவு நீரினை நீரோடை அல்லது கிணறு அல்லது வடிகால் அல்லது நிலத்தில் வெளியேற்றுவதற்காக மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் இசைவாணை பெற வேண்டும். மேலும், காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், **1981**, பிரிவு **21–**ன்படி தொழிற்சாலைகள் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில் இயக்குவதற்காக இசைவாணையை வாரியத்திடம் பெற வேண்டும். தமிழ்நாடு அரசு, **28.09.1983** நாளிட்ட சுற்றுச்சூழல் கட்டுப்பாடு துறை அரசாணை எண் **4–**ல் தமிழ்நாடு முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அறிவித்துள்ளது.

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளின் மாசு அளவினை கணக்கிட்டு அவற்றினை சிகப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என வகைப்படுத்தியுள்ளது. இதனை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அமல்படுத்தி வருகின்றது. மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிப்பதற்காக அவற்றின் மொத்த

முதலீட்டு அளவினைக் கொண்டு பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழிற்சாலைகள் என வகைப்படுத்தியுள்ளது. அதன்படி தொழிற்சாலையின் மொத்த நிலையான சொத்து மதிப்பு ரூ. 5 கோடிக்கு கீழ் இருப்பின் அவை சிறுவகை தொழிற்சாலை எனவும், ரூ. 5 முதல் 10 கோடிக்கு இடையிலிருப்பின் நடுத்தர வகை தொழிற்சாலை எனவும், ரூ 10 கோடிக்கு மேல் இருப்பின் பெரிய வகை தொழிற்சாலை எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது சுமார் 46,000 தொழிற்சாலைகள் வாரிய வரைமுறையின் கீழ் உள்ளன.

வாரியம் தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டமாக இசைவாணைகளை வழங்குகிறது. முதல் கட்டமாக தொழிற்சாலை நிறுவுவதற்கான இசைவாணை, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 கீழ், அது அமையவிருக்கும் இடத்தின் சுற்றுச்சூழல் தாக்கம், மாசு தடுப்பு முறைகள் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு சில நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக, தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்த பிறகு, தொழிற்சாலை உற்பத்தியை தொடங்குவதற்கு மற்றும் இயங்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது.

தொழிற்சாலைக்கு இசைவாணை வழங்குவதை விரைவுபடுத்தும் வகையில் இசைவாணை வழங்கும் அதிகாரம் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு தொழிற்சாலையின் அளவு மற்றும் வகையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. வாரியத்தின் கள பொறியாளர்கள், தங்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து, செயல்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைத் தொடர்ந்து கண்காணிக்கின்றனர். மேலும், பொது மக்கள் மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் மாசு பற்றிய புகார்களையும் ஆய்வு செய்கின்றனர். ஏப்ரல் 1, 2015 முதல் ஜூன் 30, 2016 வரை வாரியம் 1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ், 1452 தொழிற்சாலைகளுக்கு, நிறுவுவதற்கான இசைவாணைகளையும், 2385 தொழிற்சாலைகளுக்கு இயங்குவதற்கான இசைவாணைகளையும் வழங்கியுள்ளது.

## 5. இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை (தொழில் புரிவதற்கு சுலபமான வழிமுறை)

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவாணை மேலாண்மையில் மின் ஆளுமையை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதன்படி தொழில் முனைவோர், வாரிய இசைவாணை விண்ணப்பங்களை சுலபமாக இணையதளத்தின் மூலம் சமர்ப்பிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையை ஏற்படுத்தியுள்ளது. இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையானது இணையதளத்தினை அடிப்படையாக கொண்ட பொதுவான பயன்பாட்டு மென்பொருளாகும். இந்த மென்பொருள், வாரியத்தின் அடிப்படை செயல்பாடுகளாக விளங்கக்கூடிய இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பினை தானியங்கு முறையில் மேற்கொள்ள கூடியதாகும். நிறுவுவதற்கான இசைவாணை, இயங்குவதற்கான இசைவாணை, இசைவாணை புதுப்பித்தல், ஆவணங்கள் பதிவேற்றல், விளக்கங்கள் சமர்ப்பித்தல், விண்ணப்பங்களின் நிலையினை அறிதல் ஆகிய செயல்பாடுகளை தொழிற்சாலைகள் இணையதளம் மூலமாக தெரிந்து கொள்ள

வழிவகுக்கிறது. இணையதளம் வழியாக இசைவாணை கட்டணம் செலுத்துதல் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

மேலும் விண்ணப்பம் மறு ஆய்வு, விளக்கங்கள் கேட்டல், ஆய்வு மேற்கொள்ளல், ஆய்வறிக்கை சமர்ப்பித்தல், இசைவாணை தயாரித்தல் ஆகிய இசைவாணை மேலாண்மை செயல்முறைகளை இணையதளம் மூலமாகவே மேற்கொள்ளவும் மற்றும் வாரியத்தின் செயல்பாடுகளை வாரிய அதிகாரிகள் இணையதளம் மூலமாகவே மேற்பார்வையிடவும் இந்த அமைப்பு வழி வகுக்கிறது. 20.01.2015 முதல் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்கள், இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதற்காக தொழிற்சாலைகளுக்கு உதவும் வண்ணம் வாரியம் தமது 36 மாவட்ட அலுவலகங்களிலும் உதவி மையத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்த இணையவழி வசதி, இசைவாணை மேலாண்மையில் வெளிப்படத்தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

## 6. இணையதளம் மூலம் புகார் தீர்வு காணும் முறை

இணையதளம் மூலமாக பொதுமக்கள் புகார் தீர்வு காணும் முறையை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 1.3.2016 அன்று அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் தொழிற்சாலை

மாசு குறித்தான புகார்களை பொதுமக்கள் இணையதளம் மூலம் வாரியத்திடம் பதிவு செய்யலாம். இப்புகார்கள் மீது விசாரணை செய்து அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விபரம் மின்அஞ்சல் மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படும். ஜூன் 30, 2016 வரை 182 புகார்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு, ஆய்வு செய்து தீர்வு காணப்பட்டுள்ளன.

## 7. தொழிற்சாலைகள் கண்காணிப்பு

தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கும் நோக்கத்துடன் வாரியம் 25.02.2004 நாளிட்ட நடப்பாணை எண். 22–ல் தொழிற்சாலைகளின் அளவு மற்றும் வகையின் அடிப்படையில் அவற்றினை ஆய்வு செய்தல் மற்றும் மாதிரிகள் சேகரிப்பு செய்வதற்கான கால அளவினை நிர்ணயம் செய்துள்ளது.

| பிரிவு | தொழிற் சாலையின் வகை | ஆய்வுக்கான காலவரையறை | கழிவுநீர் மாதிரிகள் சேகரிப்பு காலவரையறை |
|---|---|---|---|
| பெரிய முதலீட்டில் இயங்கும் தொழிற்சாலைகள் | சிவப்பு | மூன்று மாதத்திற்கு ஒரு முறை | மாதம் ஒரு முறை |

| | | | |
|---|---|---|---|
| | ஆரஞ்சு | ஆறு மாதத்திற்கு ஒரு முறை | நான்கு மாதத்திற்கு ஒருமுறை |
| | பச்சை | இரண்டு வருடத்திற்கு ஒரு முறை | -- |
| நடுத்தர முதலீட்டில் இயங்கும் தொழிற்சாலைகள் | சிவப்பு | நான்கு மாதத்திற்கு ஒரு முறை | மூன்று மாதத்திற்கு ஒரு முறை |
| | ஆரஞ்சு | ஆறு மாதத்திற்கு ஒரு முறை | ஆறு மாதத்திற்கு ஒரு முறை |
| | பச்சை | இரண்டு வருடத்திற்கு ஒரு முறை | -- |
| சிறு முதலீட்டில் இயங்கும் தொழிற்சாலைகள் | சிவப்பு | வருடத்திற்கு ஒரு முறை | மூன்று முதல் ஆறு மாதத்திற்கு ஒருமுறை |
| | ஆரஞ்சு | இரண்டு வருடத்திற்கு ஒரு முறை | ஆறு மாதத்திற்கு ஒரு முறை |
| | பச்சை | இரண்டு வருடத்திற்கு ஒரு முறை | -- |
| 17 வகையான தொழிற்சாலைகள் | | மாதம் ஒருமுறை | மாதம் ஒருமுறை |

வாரியம், ஏப்ரல் 1, 2015 முதல் ஜூன் 30, 2016 வரை 1443 தொழிற்சாலைகளில் சுற்றுப்புற காற்று மாதிரி சோதனைகளையும் மற்றும் 8070 வடிகால் கழிவுநீர் மாதிரிகள் மற்றும் 19,850 செயல்முறைக்கழிவுநீர் மாதிரிகளும் எடுத்து பகுப்பாய்வு செய்துள்ளது.

## 8. காற்று தர கண்காணிப்பு மையம் (Care Air Centre)

தொழிற்சாலை புகைபோக்கியிலிருந்து வெளிவரும் வாயு கழிவுகளின் தரத்தையும் மற்றும் தொழிற்சாலையினை சுற்றியுள்ள காற்றின் தரத்தையும் கண்காணிக்கும் பொருட்டு சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் ஒரு காற்று தர கண்காணிப்பு மையத்தினை வாரியம் அமைத்துள்ளது. சிகப்பு மற்றும் 17 வகையான அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டு வாரத்தின் ஏழு நாட்களிலும், 24 மணிநேரமும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய மையம் இந்தியாவில் வேறெங்கும் இல்லாத தனித்தன்மை வாய்ந்ததாகும். தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் வாயுக்களின் தன்மை மற்றும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை குறிப்பிட்ட தர அளவினை மீறும் பொழுது, அத்தொழிற்சாலைக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் உறுப்பினர் செயலருக்கும் உடன் நிவாரண நடவடிக்கை எடுக்கும் பொருட்டு குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் தானாக

அனுப்பப்படும். ஜூன் 30, 2016 வரை 351 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 334 தொழிற்சாலைகள் புகை மாசின் அளவை கண்காணிப்பதற்காகவும் மற்றும் 90 தொழிற்சாலைகள் சுற்றுப்புறக் காற்று மாசின் அளவை கண்காணிப்பதற்காகவும் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

### 9. நீர் தர கண்காணிப்பு மையம் (Water Quality Watch Centre)

வாரியம், சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் ஒரு நீர் தர கண்காணிப்பு மையத்தினை அமைத்துள்ளது. இம்மையம் ஜூலை 2015 முதல் செயல்பட்டு வருகின்றது. தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரத்தினை இணைய வழி மூலம் வாரத்தின் ஏழு நாட்களிலும், 24 மணி நேரமும் தொடர்ந்து இம்மையம் கண்காணிக்கின்றது. ஜூன் 30, 2016 வரை 82 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 44 தொழிற்சாலைகள், அவற்றில் அமைக்கப்பட்டுள்ள பூஜ்ஜிய மாசுநிலை கழிவுநீர் வெளியேற்ற நிலையத்தினை கண்காணிப்பதற்காகவும், 38 தொழிற்சாலைகள் அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தரத்தினை

கண்காணிப்பதற்காகவும் இணைக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான கண்காணிப்பு முறை தொழிற்சாலைகளின் சுய கண்காணிப்பிற்கும் மற்றும் வெளியேற்றப்படும் கழிவுநீரின் தர மேம்பாட்டிற்கும் வழிவகை செய்கின்றது.

## 10. பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சிறு தொழிற்சாலைகளின் முக்கியத்துவத்தையும் மற்றும் மாசு கட்டுப்பாடு குறியீடுகளை அடைவதற்கு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் சிரமத்தையும் கருத்தில் கொண்டு, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் அவர்கள் தொழில் முன்னேற்றம் அடையும் வகையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், சிறு தொழிற்சாலைகளுக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவி செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்தது. இத்திட்டம் தொகுப்பாக அமைந்துள்ள சிறு தொழிற்சாலைகள், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு நிதி உதவி பெறுவதற்கு வழிவகை செய்தது. அதன்படி, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந்திருக்கும் சிறு தொழிற்சாலைகளுக்கு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் வாரியம் முக்கிய பங்காற்றி வருகிறது. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட அறிக்கையின் மீது தொழில் நுட்ப

பரிசீலனை செய்வதற்கு வாரியம் உதவி புரிகிறது. தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விபரங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 13 திட்டங்கள் |
| துணிச்சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 30 திட்டங்கள் |
| உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் |

தோல் தொழிற்சாலைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள 13 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 11 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ஜிய நிலைப்பாட்டை அடையக்கூடிய அமைப்புகளை பொருத்தியுள்ளன. மீதம் உள்ள இரண்டு பொது சுத்திகரிப்பு நிலையங்களில், ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் முதல் மற்றும் இரண்டாம் நிலை சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவியுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை, சுத்திகரிக்கபட்ட வடிகால் கழிவுநீருடன் கலந்து வாரியம் நிர்ணயித்த தர அளவினை எட்டுவதற்கு முடிவு செய்துள்ளது. மற்றொரு பொது சுத்திகரிப்பு நிலையத்தில் பூஜ்ஜிய மாசு நிலை கழிவுநீர் வெளியேற்று நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

துணிச் சலவை மற்றும் சாய தொழிற்சாலைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள 30 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், 19 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ஜிய நிலைப்பாட்டை அடைய கூடிய அமைப்பினை பொருத்தியுள்ளன. மீதமுள்ள 11 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ஜியநிலை கழிவுநீர் வெளியேற்றத்துடன் கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைக்காத காரணத்தால் மாண்புமிகு உயர்நீதி மன்ற ஆணையின் படி மூடப்பட்டுள்ளன. கொடைக்கானலில், கொடை ஏரியை சுற்றியுள்ள தங்கும் மற்றும் உணவு விடுதிகளிலிருந்து வெளியேறும் வடிகால் கழிவுநீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்வதற்கு ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருகின்றது.

## 11. திடக்கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி, திடக்கழிவு என்பது வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் திட மற்றும் அரை திடக்கழிவுகள், சுகாதாரக் கழிவுகள், வணிகக்கழிவுகள், நிறுவனக்கழிவுகள், உணவகம் மற்றும் சந்தைக் கழிவுகள், குடியிருப்பு அல்லாத பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள், தெருக்களை சுத்தப்படுத்தும் போது ஏற்படும்

கழிவுகள், வடிகால்களை தூர்வாரும் போது உருவாகும் கழிவுகள், தோட்டக் கழிவுகள், விவசாயம் மற்றும் கால்நடை வளாகக் கழிவுகள், சுத்திகரிக்கப்பட்ட மருத்துவக் கழிவுகள் ஆகியவை இதில் அடங்கும். தொழிற்சாலைக் கழிவுகள், மருத்துவக் கழிவுகள், மின்னணுக் கழிவுகள், மின்கலன் கழிவுகள், கதிர் இயக்க கழிவுகள் இதில் அடங்காது. மேற்படி திடக்கழிவுகளை, சேகரித்து, சுத்திகரிப்பு செய்து அகற்றுவது அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் கடமையாகும்.

மேற்படி விதிகள் முறையாக செயல்படுத்தப் படுகின்றதா என்பதை கண்காணிப்பதும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு திடக் கழிவுகளை சுத்திகரிப்பு செய்து அகற்றுவதற்கான அங்கீகாரம் வழங்குவதும் வாரியத்தின் பொறுப்பாகும். அதன்படி உள்ளாட்சி அமைப்புகள், திடக்கழிவுகள் மேலாண்மை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அங்கீகாரம் வழங்குகிறது. இதுவரை வாரியம் 5 மாநகராட்சிகள், 48 நகராட்சிகள் மற்றும் 73 பேரூராட்சிகளுக்கு திடக் கழிவுகளை தரம் பிரித்து கையாள்வதற்கும் மற்றும் உரம் தயாரிக்கவும் அங்கீகாரங்களை வழங்கியுள்ளது. திடக்கழிவுகளை உருவாகுமிடத்திலிருந்தே பிரித்து கையாளுதல், குறைத்தல், மறு சுழற்சி செய்தல் மற்றும்

மறு உபயோகம் செய்தல் போன்றவற்றை வாரியம் பரிந்துரை செய்கின்றது.

## 12. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016–யை அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின் படி, பிளாஸ்டிக் கழிவு என்பது, பயன்படுத்தப்பட்டு அல்லது பயன்படுத்தும் நோக்கம் நிறைவேறியவுடன் தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் ஆகும். பிளாஸ்டிக் கழிவுகளை தரம்பிரித்தல், சேகரித்தல், சேமித்தல், கொண்டு செல்லுதல், செயலாக்கம் செய்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும்.

இவ்விதிகளின்படி, புதிய மற்றும் மறு சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் பைகள் 50 மைக்ரான் தடிமனுக்கு கீழ் இருக்கக்கூடாது. பிளாஸ்டிக் பைகள், பல அடுக்குகள் கொண்ட பேக்கேஜிங், பிளாஸ்டிக் சீட் அல்லது அது போன்ற பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்வோர் மற்றும் இறக்குமதி செய்வோர், மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியத்திடம் பதிவுச் சான்றிதழ் பெற

வேண்டும். இவ்விதிகளின்படி பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பல அடுக்கு பேக்கேஜிங் பிளாஸ்டிக் உற்பத்தி செய்வோர் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவோர்களை பதிவு செய்து, கண்காணிப்பது மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பொறுப்பாகும். இதுவரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 471 பிளாஸ்டிக் பைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் 140 பிளாஸ்டிக் பொருட்கள் மறு சுழற்சி செய்யும் தொழிற்சாலைகளை கண்டறிந்துள்ளது. இவற்றில் 219 தொழிற்சாலைகளுக்கு வாரியத்தின் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம், ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் ஆண்டுதோறும் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) 2015 ஆம் ஆண்டிலிருந்து வாரியம் வழங்கி வருகின்றது. மேற்படி விதிகளை திறம்பட செயல்படுத்த வேண்டும் என அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

## 13. தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016–ஐ அறிவிக்கை செய்துள்ளது.

இவ்விதிகளின்படி தீங்கு விளைவிக்கும் கழிவு என்பது, அதனுடைய இயற்பியல், வேதியியல், மறுவினையாக்கம், நச்சு பண்பு, எரியக்கூடிய, வெடிக்கக்கூடிய அல்லது அரிமான பண்புகளுடையதும் அல்லது மனிதநலம் அல்லது சுற்றுச்சூழலுக்கு அபாயம் தரவல்லது ஆகும். தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்வோர், அக்கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே தவிர்த்தல், குறைத்தல், மறு உபயோகம் செய்தல், மறு சுழற்சி செய்தல், மீளப்பெறுதல், இணை செயலாக்கத்திற்கு பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான முறையில் அகற்றுதல் போன்ற வழிமுறைகளை கையாளவேண்டும். இவ்விதிகளின்படி மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகாரத்தை வழங்கவேண்டும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 3545 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை கண்டறிந்து, இவ்விதிகளின் கீழ் அங்கீகாரம் வழங்கியுள்ளது. தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்கு **6.92** இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் **2.97** இலட்சம் டன் கழிவுகள் நில நிரப்பு செய்யப்படுபவை, **3.43** இலட்சம் டன் கழிவுகள் மறு சுழற்சி செய்யப்படுபவை மற்றும் **0.52** இலட்சம் டன் கழிவுகள்

எரிப்பான் மூலமாக அப்புறப்படுத்தப்படுபவை. தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி, விஞ்ஞான முறையில் பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. கும்மிடிபூண்டியில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்தில் தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்களை, பாதுகாப்பாக சுத்திகரித்து, நிலம்நிரப்பும் ஒரு பொதுவசதி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் ஒரு பொது சுத்திகரிப்பு அமைப்பு விருதுநகர் மாவட்டம், உண்டுஉருமிகிடாக்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

துணிச் சலவை மற்றும் சாயமிடும் தொழிற்சாலைகளின் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து உருவாகும் தீங்கு விளைவிக்கும் திடக்கழிவினை, சிமெண்ட் தொழிற்சாலைகளில் மூலப் பொருளாகவும் மற்றும் எரிபொருளாகவும் பயன்படுத்துவதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முன்னோடி முயற்சிகளை எடுத்துள்ளது. இதுவரை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்பட்ட சுமார் 50,000 டன் திடக்கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலையில் மூலப் பொருள்களுடன் கலந்து சிமெண்ட் தயாரிக்க

பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மற்ற தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை சீரமைப்பு செய்து, அதனை சிமெண்ட் தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இராணிப்பேட்டையில் தி/ள். குஜராத் சுற்றுச்சூழல் மற்றும் உட்கட்டமைப்பு நிறுவனம் ஒரு பொது வசதியை ஏற்படுத்தி இயக்கி வருகின்றது.

## 13.1 தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மைக்கு இணையதளம் மூலம் அங்கீகாரம் வழங்குதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இணையதளம் மூலமாக தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகார விண்ணப்பங்களை பெற்று, பரிசீலனை செய்து, அங்கீகாரத்தையும் இணையதளம் மூலமாகவே வழங்குவதற்கான மென்பொருளை 01.03.2016 அன்று அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் தொழிற்சாலைகள் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகாரம் வேண்டி விண்ணப்பத்தினை இணையதளம் மூலம் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, இணையதளம் மூலம் அங்கீகாரம் வழங்கப்படும். இவ்வசதியின் மூலம் தொழிற்சாலைகள் தங்களது விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை இணையதளம் மூலமாகவே அறிந்து

கொள்ளலாம். ஜுன் 30, 2016 வரை 399 தொழிற்சாலைகளிலிருந்து விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகின்றன.

## 14. மருத்துவக் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின் படி மருத்துவக் கழிவு என்பது, மனித இனம் மற்றும் விலங்கினங்களுக்கு நோய் பரிசோதித்தல், சிகிச்சை அளித்தல், நோய் தடுப்பு செய்தல், மற்றும் மருத்துவ ஆராய்ச்சி செய்தல், மருத்துவ முகாம்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் கழிவுகளாகும். மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து சுத்திகரிப்பு செய்து அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவோர்களின் பொறுப்பாகும். மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகளை அனைத்து மருத்துவமனைகளும் சரிவர பின்பற்றுகின்றனவா என்பதை உறுதி செய்வது மாநில அரசு சுகாதாரத்துறையின் பொறுப்பாகும்.

மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அந்நிறுவனங்கள் விதிகளை சரிவர கடைபிடிக்கின்றனவா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தை சார்ந்ததாகும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இவ்விதிகளின் கீழ் **6261** தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அனைத்து மருத்துவமனைகளும் மருத்துவக்கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு செய்தல் மற்றும் விஞ்ஞான முறைப்படி அகற்றுதல் பொருட்டு, பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களில் உயர் அழுத்த நீராவி மூலம் சுத்திகரிக்கும் கருவி, துரும்பாக்கும் கருவி, எரிப்பான் மற்றும் பாதுகாப்பான நிலநிரப்பு ஆகிய அமைப்புகள் உள்ளன. தமிழ்நாட்டில் **11** பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இவற்றில் நாளொன்றுக்கு **43** டன் மருத்துவக்கழிவுகள் கையாளப்படுகின்றன. மேலும் **3** பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் திருவள்ளூர், கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

## 15. **மின்னணுக் கழிவு மேலாண்மை**

மத்திய அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், மின்னணு கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகள் அக்டோபர் 1, 2016 முதல் அமலுக்கு வருகின்றது. இவ்விதிகளின் படி, மின்னணு கழிவு என்பது பழைய, காலாவதியான தொலைபேசி, கைப்பேசி, கணினி, மடிக்கணினி, தொலைகாட்சி பெட்டி, குளிர்சாதனப்பெட்டி, துணிச் சலவை இயந்திரம், பாதரச விளக்குகள் போன்ற மின் மற்றும் மின்னணு சாதனங்கள் அடங்கும். மின் மற்றும் மின்னணு சாதனங்கள் உற்பத்தியாளர், தயாரிப்பாளர், நுகர்வோர், மொத்தமாக நுகர்வோர், சேகரிப்பு மையங்கள், வியாபாரம் செய்வோர், இணையம் மூலம் சில்லரை வர்த்தகம் செய்வோர், மின் மற்றும் மின்னணு சாதனங்களை சீர் செய்வோர், பிரித்தெடுப்போர், மற்றும் மின்னணு கழிவு, மின் மற்றும் மின்னணு சாதனங்களை மறுசுழற்சி செய்தல், விற்பனை செய்தல், இடமாற்றம் செய்தல், கொள்முதல் செய்தல், சேகரித்தல், சேமித்தல், செயல்முறை செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவோருக்கு இவ்விதிகள் பொருந்தும்.

இவ்விதிகளின்படி, மின் மற்றும் மின்னணு சாதனங்களை தயாரிப்போர், அவர்கள் தயாரிக்கும் பொருட்களால் உண்டாகும் மின்னணு கழிவுகளை ஒருமுகப்படுத்தி சேகரிப்பு செய்வது

அவர்களின் பொறுப்பாகும். மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் மின் மற்றும் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்வோர், பிரித்தெடுப்போர், மறுசுழற்சி செய்வோர், சீர் செய்வோர், ஆகியோருக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் செய்ய வேண்டும். மின் மற்றும் மின்னணு சாதனங்களை தயாரிப்போர், மின்னணுக் கழிவுகளை ஒருமுகப்படுத்தி சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் கையாளுகின்றார்களா என்பதை மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணிக்க வேண்டும். மேலும் மின் மற்றும் மின்னணு சாதனங்களை பிரித்தெடுப்போர், மறுசுழற்சி செய்வோர் மற்றும் சீர் செய்வோர்களை மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும். மேலும், மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் மறுசுழற்சி செய்வதை ஊக்குவிக்கும் வகையில் அதற்கான தகவல்கள், அங்கீகாரம் வழங்கப்பட்ட விபரங்கள் மற்றும் விதிகளை மீறுவோர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்களை இணையதளத்தில் வெளியிட வேண்டும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மின்னணு கழிவு மேலாண்மை விதிகளின்படி, 35 தொழிற்சாலைகளுக்கு (தயாரிப்பாளர்கள்–4, சேகரிப்பு மையங்கள் – 13, பிரித்தெடுப்போர் –13, மறுசுழற்சி செய்வோர்–5) அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 16. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ அறிவிக்கை செய்துள்ளது. கட்டுமான செயல்களின் போது உண்டாகும் கழிவுகளை மேலாண்மை செய்வதற்காக பிரத்தியேகமாக இவ்விதிகள் புதிதாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இவ்விதிகள் தனி நபர் அல்லது நிறுவனம் அல்லது குழுமம் மூலம் மேற்கொள்ளப்படும் கட்டிட கட்டுமானம், பழுது பார்த்தல், இடித்தல் போன்ற செயல்களால் வெளியேற்றப்படும் கட்டுமான பொருட்கள், இடிமான கழிவுகள் ஆகியவற்றை மேலாண்மை செய்வதற்கு பொருந்தும். உள்ளாட்சி அமைப்புகள் கட்டுமானம் மற்றும் இடிமான கழிவுகளை சரியான முறையில் மேலாண்மை செய்வதை உறுதி செய்ய வேண்டும். மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, விதிகளை சரியான முறையில் அமல்படுத்துகின்றார்களா என்பதை கண்காணிக்க வேண்டும். கட்டுமானம் மற்றும் இடிமான கழிவுகளை சேகரித்து, மறுசுழற்சி செய்யும் வசதி ஏற்படுத்துவதற்கான இடத்தை தேர்வு செய்யும்படி உள்ளாட்சி அமைப்புகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கேட்டு கொண்டுள்ளது.

## 17. நீரின் தன்மை கண்காணிப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பெரிய நதிகள் மற்றும் அதன் உப நதிகளில் நீரின் தன்மையை மொத்தம் 55 இடங்களில் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டம் மற்றும் புவி சுற்றுப்புறச்சூழல் கண்காணிப்பு திட்டத்தின் கீழ் கண்காணித்து வருகின்றது. அதன் விபரம் பின்வருமாறு:

| வரிசை எண் | நீர்நிலைகள் | கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை | நீர்நிலைகளின் தரம் |
|---|---|---|---|
| 1 | காவிரி ஆறு மற்றும் உப நதிகள் | 33 | குளிப்பதற்கும் முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும், மீன்வளர்ப்பு மற்றும் வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது |
| 2 | தாமிரபரணி ஆறு | 12 | குளிப்பதற்கும் முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| 3 | பாலாறு | 1 | சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது |
| 4 | வைகை ஆறு | 1 | சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது |
| 5 | ஏரிகள் | 8 | முறையான சுத்திகரிப்பும், அதை தொடர்ந்து கிருமிநாசினிமூலம் சுத்திகரிப்பும் செய்து குடிநீர் பயன்பாட்டிற்கும் மற்றும் மீன்வளர்ப்பு, வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது. |

## 17.1 தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள்

துணிச் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளில் நீர் நிலைகளின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு,

வாரியம் காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் நொய்யல் ஆற்றில் ஒவ்வொன்றிலும் மூன்று இடங்களில் தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் அமைத்துள்ளது. இது போன்று தாமிரபரணி ஆற்றிலும் மூன்று இடங்களில் தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்களை வாரியம் அமைந்துள்ளது இந்நிலையங்களின் மூலம் நீரின் அமில கார சமநிலை, மொத்தம் கரைந்துள்ள திடப் பொருட்கள், கரைந்துள்ள பிராண வாயு அளவு ஆகிய காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. இதுபோன்று காவிரி ஆற்றிலும் கண்காணிப்பு நிலையங்கள் அமைக்க வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

18. **சுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பு**

தமிழகத்தின் முக்கிய நகரங்களில், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் நச்சு புகை மற்றும் வாகன புகையினால், சுற்றுப்புற காற்றின் தரம் பாதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சுற்றுப்புற காற்றின் தரத்தினை கண்காணிக்கும் வண்ணம் மொத்தம் **28** இடங்களில், தேசிய காற்று மண்டல கண்காணிப்பு திட்டத்தின் கீழ் அதிக கொள்ளளவு மாதிரி சேகரிப்பான் கருவி கொண்டு காற்றின் தரத்தினை வாரியம் கண்காணித்து வருகின்றது. அதன் விபரம் பின்வருமாறு:

| வரிசை எண் | நகரம் | இடம் | நில பயன்பாடு |
|---|---|---|---|
| 1 | சென்னை | கத்திவாக்கம் | தொழிற்சாலைப்பகுதி |
| | | மணலி | தொழிற்சாலைப்பகுதி |
| | | திருவொற்றியூர் | தொழிற்சாலைப்பகுதி |
| | | கீழ்பாக்கம் | வியாபார மற்றும் வாகன புழக்க பகுதி |
| | | தியாகராய நகர் | வியாபார மற்றும் வாகன புழக்க பகுதி |
| | | நுங்கம்பாக்கம் | வியாபார மற்றும் வாகன புழக்க பகுதி |
| | | அண்ணாநகர் | குடியிருப்புப்பகுதி |
| | | அடையாறு | குடியிருப்புப்பகுதி |
| 2 | கோவை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | கலப்பு குடியிருப்பு பகுதி |
| | | பொன்னையா ராஜபுரம் | குடியிருப்புப் பகுதி |
| | | சிட்கோ கட்டிடம் | தொழிற்சாலைப் பகுதி |
| 3 | மதுரை | நெடுஞ்சாலைத்துறை கட்டிடம் | குடியிருப்புப் பகுதி |
| | | சுசி கார்ஸ் ட்ரக்ஸ் (பி) லிட் | தொழிற்சாலைப் பகுதி |
| | | மதுரை மாநகராட்சி அலுவலகம் (தெற்கு) | கலப்பு குடியிருப்பு பகுதி |

| | | | |
|---|---|---|---|
| 4 | சேலம் | சௌடேஸ்வரி கல்லூரி | கலப்பு குடியிருப்பு பகுதி |
| 5 | திருச்சி | காந்தி மார்க்கட் | வியாபாரப்பகுதி |
| | | மெயின்கார்டு கேட் | போக்குவரத்துப்பகுதி |
| | | பிஷப் ஹீபர் கல்லூரி | கலப்பு குடியிருப்பு பகுதி |
| | | பொன்மலை | குடியிருப்புப்பகுதி |
| | | மையப்பேருந்து நிலையம் | போக்குவரத்துப்பகுதி |
| 6 | தூத்துக்குடி | இராஜா ஏஜென்சீஸ் | தொழிற்சாலைப்பகுதி |
| | | சிப்காட் | தொழிற்சாலைப்பகுதி |
| | | ஏ.வி.எம். கட்டிடம் | கலப்பு குடியிருப்பு பகுதி |
| 7 | மேட்டூர் | இராமன் நகர் | குடியிருப்பு பகுதி |
| | | சிட்கோ | தொழிற்சாலைப்பகுதி |
| 8 | கடலூர் | ஈச்சங்காடு கிராமம் | குடியிருப்பு பகுதி |
| | | இம்பீரியல் கல்லூரி | வியாபாரப்பகுதி |
| | | சிப்காட் | தொழிற்சாலைப்பகுதி |

இவ்விடங்களில் வாரம் இருமுறை **24** மணி நேரமும் கண்காணிப்பு நடத்தி, மாதிரிகள் எடுக்கப்பட்டு சுவாசிக்கும் போது உட்செல்லக்கூடிய **10** மைக்ரான் அளவுக்கு குறைந்த மிதக்கும் நுண்துகள்கள் ($PM_{10}$), சல்பர் டை ஆக்ஸைடு மற்றும்

நைட்ரஜன் டை ஆக்ஸைடு ஆகிய வாயுக் கழிவுகளின் அளவுகள் கண்டறியப்படுகிறது. **2015–2016** ஆண்டுக்கான சல்பர்–டை–ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் டை ஆக்ஸைடுகளின் சராசரி அளவுகள், கண்காணிப்பு நடத்திய அனைத்து இடங்களிலும், பரிந்துரைக்கப்பட்ட காற்றுத்தர அளவீடுகளுக்குட்பட்டு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சுவாசிக்கும் போது உட்செல்லக்கூடிய மிதக்கும் நுண்துகள்களின் அளவு சில இடங்களில் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நுண்துகள்கள் அதிகமாக இருப்பதற்கு முக்கிய காரணம் வாகன போக்குவரத்தாகும்.

## 18.1 தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்

சுற்றுப்புற காற்று தரத்தினை, மனிதர்கள் மூலம் கண்காணிப்பு செய்வதுடன், தானியங்கி மூலம் தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், வாரியம் **6** இடங்களில் தானியங்கி தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. அதன்படி சென்னையில் **4** இடங்களில் அதாவது கோயம்பேடு, ராயபுரம், பெருங்குடி (சாய் நகர்), கொடுங்கையூர் ஆகிய இடங்களிலும், கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகத்திலும் மற்றும் தூத்துக்குடி சிப்காட் வளாகத்திலும் அமைக்கப்பட்டு இயக்கத்தில் உள்ளன. இந்நிலையங்கள் மூலம் காற்றில் கலந்துள்ள **10** மைக்ரான் அளவுக்கு கீழ் உள்ள

நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், சல்பர் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு மற்றும் பென்சீன் ஆகிய வாயு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இத்தொடர் கண்காணிப்பு நிலையங்களின் முக்கிய அம்சங்கள்

i. ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் காற்றின் தரம் பதிவு செய்யப்படுகின்றது.

ii. காற்றின் தரம், நிர்ணயிக்கப்பட்ட தர அளவினைவிட அதிகரிக்கும் போது உடனடியாக தகவல் தெரிவிக்கப்படுகிறது.

iii. கருவியின் அளவிடும் திறன் மற்றும் காற்று காரணிகள் அளவீட்டினைக் கொண்டு பதிவு செய்யப்பட்ட தகவல்கள் சரிபார்க்கப்படுகிறது.

iv. தொடர் கண்காணிப்பு நிலையங்கள் மாநிலத்தில் எவ்விடத்திலிருந்தாலும், அவற்றில் பதிவு செய்யப்படும் தகவல்களை ஒரு பொதுவான அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு கண்காணிப்பு செய்யலாம்.

v. இந்நிலையங்களில் பதிவு செய்யப்படும் தகவல்களை கைப்பேசி மற்றும் தொலைப்பேசி வாயிலாக தெரிந்து கொள்ளும் வசதியை ஏற்படுத்தி கொள்ளலாம்.

vi. முந்தைய மற்றும் தற்போதைய காற்று தரம் பற்றிய தகவல்களை உடனடியாக தேவையான வடிவில் பெற்றுக் கொள்ளலாம்.

vii. இதில் உள்ள மென்பொருளைக் கொண்டு ஓர் இடத்தின் சுற்றுப்புற காற்று தரம் பற்றி ஒரு மணி நேரம், எட்டு மணி நேரம், மாதம் மற்றும் வருடம் ஆகிய கால இடைவெளியில் மற்ற இடங்களின் காற்று தரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

## 18.2 நடமாடும் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் காற்று தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் ஒரு நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தினை மார்ச் **2016**–ல் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் காற்றில் கலந்துள்ள கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு, அம்மோனியா, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு, பென்சீன், டொலுவின், ஈத்தைல் பென்சீன், சைலீன், காற்றில் **10** மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்

துகள்கள் மற்றும் **2.5** மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண் துகள்கள் ஆகியவற்றை அளவீடு செய்யலாம். மேலும், இந்நிலையத்தில் காற்றின் திசை, காற்றின் வேகம், சுற்றுப்புற வெப்ப நிலை, ஈரப்பதம், சூரிய கதிர்வீச்சு, மழை அளவு, காற்றின் அழுத்தம் போன்ற வானிலை சம்பந்தமான தகவல்களை அறியும் கருவிகள் உள்ளன. இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் சென்னை பெருநகரின் அதிக மாசு பகுதிகள் மற்றும் இதர பகுதிகளில் காற்றின் தரத்தினை அளவீடு செய்யலாம். இந்தியாவில் உள்ள மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களில் முதன் முதலில் நடமாடும் காற்று தர கண்காணிப்பு நிலையத்தை ஏற்படுத்திய பெருமை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தையே சாரும்.

## 19. **வாரியத்தின் இதர முக்கிய பணிகள்**

### 19.1 **தூய்மையான தொழில் நுட்பங்கள்**

முழுமையான சுற்றுச்சூழல் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்தியிலிருந்து வெளியேறும் கழிவுகளை இறுதியில் சுத்திகரிப்பு செய்வதை தவிர்த்து, கழிவுகளே உற்பத்தியாகாமல் உள்ள தூய்மையான தொழில்நுட்ப முறைகளை கையாளவேண்டும் என வாரியம் அறிவுறுத்தி வருகின்றது. அதன்படி தமிழ்நாட்டில் பல்வேறு

தொழிற்சாலைகள் தூய்மையான தொழில்நுட்ப செயல்முறைக்கு மாறியுள்ளன. உதாரணமாக

- எரிசோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல்.
- சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல்.
- பி.பி.சி சிமெண்ட் உற்பத்தியில் 25 முதல் 30 சதவிகிதம் வரை எரிசாம்பலை பயன்படுத்துதல்.
- கந்தக அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள், இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில்நுட்பத்தை செயல்படுத்துதல்.
- சயனைடு அற்ற முலாம் பூசுதல் மற்றும் சயனைடு உப்புக்கு பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்பக் கடினப்படுத்துதலுக்கு பின்பற்றுதல்.
- மரக்கூழ் மற்றும் காகித தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ–குளோரின் உருவாவதை குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினை பின்பற்றுதல்.

- செறிவூட்டப்பட்ட கரி தயாரிக்கும் தொழிற்சாலைகள், தங்கள் உற்பத்திக்கு தேவைப்படும் நீராவியினை அதற்கென அமைக்கப்பட்ட எரிபொருளை கொண்டு இயங்கும் கொதிகலனை நிறுத்திவிட்டு, உபரி வெப்பத்தை கொண்டு இயங்கும் கொதிகலனை நிறுவியுள்ளன. இதனால் விறகு மற்றும் நிலக்கரி எரிபொருள் பயன்பாடு தவிர்க்கப்பட்டதுடன், பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேறுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

## 19.2 **தொழில்நுட்ப செயல் விளக்க மையம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இந்திய தொழில்நுட்ப கழகம், சென்னையுடன் இணைந்து ஐ.ஐ.டி வளாகத்தில் ஒரு தொழில்நுட்ப செயல் விளக்க மையத்தை ரூ. 5 கோடி நிதியில் ஏற்படுத்தியுள்ளது. இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. இந்த தொழில்நுட்ப செயலாக்க மையமானது, அரிசி ஆலை, சவ்வரிசி ஆலை, சிறுவகை சாயமிடும் தொழிற்சாலைகளுக்கான சுத்திகரிப்பு முறைகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டது. இந்த மையத்தின் மூலம் நிலநிரப்பினால் ஏற்படும் பிரச்னைகளை கையாள்வது குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு உள்ளாட்சி துறை அதிகாரிகள், தீயணைப்பு துறை அதிகாரிகள் மற்றும்

வாரிய அதிகாரிகளுக்கும் நடத்தப்பட்டது. மேலும் இம்மையத்தின் மூலம் சவ்வரிசி தொழிற்சாலைகளுக்கான தொழில்நுட்ப கருத்தரங்கம் நடத்தப்பட்டு, அதில் சவ்வரிசி தொழிற்சாலைகளின் கழிவுநீரின் தன்மையினை அறிந்து கொள்ளவும், காற்றில்லா சுத்திகரிப்பு முறை, எரிவாயு உற்பத்தி மற்றும் அதன் தன்மை, எரிவாயு உற்பத்தி அதிகரிப்பு போன்றவைகள் பற்றி விளக்கப்பட்டது. மேலும் சவ்வரிசி தொழிற்சாலை கழிவுநீரை பயன்படுத்தி காற்றில்லா சுத்திகரிப்பு செய்து எரிவாயு எடுப்பதற்கான சிறந்த தொழிற்நுட்ப முறையை செயல் விளக்கம் செய்து காட்டுவதற்கு ஒரு ‘மேல் நோக்கி நகரும் காற்றில்லா சேற்றுபடலம்’ என்ற சுத்திகரிப்பு அமைப்பினை இம்மையம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இது சம்மந்தமாக மேலும் ஆராய்ச்சி நடந்து வருகின்றது.

## 19.3 **மாபெரும் மரம் நடும் திட்டம்**

தமிழ்நாட்டில் மாபெரும் மரம் நடும் திட்டம் செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வனத்துறை மூலம் **64** லட்சம், **65** லட்சம், **66** லட்சம் மற்றும் **67** லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்காக **2012**, **2013**, **2014** மற்றும் **2015** ஆம் ஆண்டுகளில் நிதி உதவி செய்துள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை வாரியம் ரூ.**28.84** கோடி, ரூ.**20** கோடி, ரூ.**17.99** கோடி மற்றும் ரூ.**16.832** கோடியினை முறையே

**2012, 2013, 2014** மற்றும் **2015** ஆம் ஆண்டுகளில் வனத்துறைக்கு வழங்கியுள்ளது.

## 19.4 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு

பல்வேறு மாசு கட்டுப்பாடு அளவீடுகளை, செம்மையான முறையில் அடைய, சுற்றுச்சூழல் பிரச்சாரம் ஒரு சிறந்த கருவியாக உள்ளது. வாழ்வதற்கான சிறந்த சூழல் என்ற முக்கிய இலக்கினை அடைய, அரசு இயந்திரம், சுற்றுச்சூழலுக்கு உகந்த விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை செயல்படுத்தி வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு வகையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது.

- **<u>விநாயகர் சதுர்த்தி:–</u>**

  நீர்நிலைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் விநாயகர் சிலைகள் தயாரிப்பதற்கு பிளாஸ்டர் ஆப் பாரீஸ் மற்றும் பெயிண்ட்டுகளை பயன்படுத்த கூடாது என்று விழிப்புணர்வு பிரச்சாரம் ஒவ்வொரு மாவட்ட தலைமையகத்திலும், நகரங்களிலும் நடத்தப்படுகிறது. மேலும், சிலைகள் கரைக்கப்படுவதற்கு முன்பும், கரைத்த பின்பும், கண்டறியப்பட்ட நீர் நிலைகளில் நீரின் தரம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் ஆண்டுதோறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

- **<u>தீபாவளி பண்டிகை:–</u>**

125 டெசிபெல் என்ற ஒலி அளவுக்கு மேல் ஒலி ஏற்படுத்தும் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது என்றும், மேலும் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை பட்டாசுகளை வெடிக்க வேண்டாம் என்றும், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வேலூர், சேலம், ஓசூர், திருப்பூர், திண்டுக்கல் மற்றும் கடலூர் ஆகிய நகரங்களில் சுற்றுப்புற காற்றுத்தரம் மற்றும் ஒலி அளவினை, தீபாவளிக்கு முந்தைய நாளிலும், தீபாவளி நாளன்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. இதன் முடிவுகள் வாரிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது.

- **<u>போகி பண்டிகை:–</u>**

டயர்கள், டியூபுகள், பிளாஸ்டிக் பொருட்கள், துணிகள் போன்ற வீணான பொருட்களை எரிக்கக்கூடாது என்று விழிப்புணர்வு பிரச்சாரங்கள் வாரியத்தால் நடத்தப்படுகிறது. மேலும் சென்னை

மாநகரில், 15 இடங்களில், போகி பண்டிகைக்கு முந்தைய நாட்களிலும், போகி பண்டிகை நாளிலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது சுற்றுப்புறக் காற்று தரத்தினை கண்காணிக்கிறது. இதன் முடிவுகள் வாரிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது.

- **<u>கார்த்திகை மகா தீபத்திருவிழா:–</u>**

திருவண்ணாமலையில் நடைப்பெறும் கார்த்திகை மகா தீபத்திருவிழாவின் போது பிளாஸ்டிக் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் வாரியத்தின் மூலம் நடத்தப்படுகின்றன. அதன்படி, பிளாஸ்டிக் பைகளை தவிர்த்து அதற்கு மாற்றாக துணிப்பை, காகிதப் பை, சணல் பை போன்றவற்றை பயன்படுத்த ஊக்குவிக்கும் வண்ணம், கார்த்திகை மகா தீபத்திருவிழாவிற்கு துணிப்பை மற்றும் சணல் பையுடன் வரும் பொது மக்களுக்கு கூப்பன் வழங்கி, இறுதியில் குலுக்கல் மூலம் தேர்வு செய்து தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை வாரியம் பரிசாக அளிக்கின்றது. இந்நிகழ்ச்சி பொது மக்களிடையே பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

➢ **மகாமகம் திருவிழா:–**

ஜனவரி **2016–**ல், கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகம் திருவிழாவில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பெரிய அளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியது. **07.01.2016** அன்று ‘‘மாசில்லா மகாமகம்’’ என்ற பொருளை முன்வைத்து கும்பகோணத்தில் ஒரு பெரிய பேரணியை நடத்தியது. இதில் **1000–**க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். **22.01.2016** அன்று ‘‘தூய்மை கும்பகோணம்’’ என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இதில் **500–**க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். **02.02.2016** அன்று பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இதில் **1000–**க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவியர்கள் பங்குபெற்றனர். **03.02.2016** அன்று ‘‘தூய்மை கும்பகோணம்’’ என்ற பொருளை முன் வைத்து, **1500–**க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவியர் பங்கேற்புடன் மனித சங்கிலி நடத்தப்பட்டது. மேலும் மகாமகம் திருவிழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறப்பு பொருட்காட்சியில் வாரியம் பங்குபெற்றது.

- **அரசு பொருட்காட்சிகள்:-**

வாரியம், சென்னை தீவுத்திடலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அரசு பொருட்காட்சியிலும் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சிகளிலும் சிறப்பாக பங்கேற்று வருகின்றது. இப்பொருட்காட்சிகளில் வாரியம் அரங்கம் அமைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், காற்று மாசுகட்டுப்பாடு சாதனங்கள், திடக்கழிவு மேலாண்மை பற்றிய மாதிரி வடிவமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்மந்தமான தகவல்களை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கிறது. **2015–2016–**ஆம் ஆண்டில் வாரியம் சென்னை தீவுத்திடல், திருவண்ணாமலை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அரசு பொருட்காட்சிகளில் பங்குபெற்றது. இதில் அமைக்கப்பட்டிருந்த வாரிய அரங்கினை அதிக அளவில் மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டு பயனடைந்தனர். தேனி மாவட்டத்தில் வைகை பெருவிழா என்ற திருவிழாவினை முன்னிட்டு நடைபெற்ற பொருட்காட்சியில் வாரியம் அரங்கம் அமைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்மந்தமான தகவல்களை பொது மக்களிடம் எடுத்துச் சென்றது.

## 19.5 சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒரு பகுதியான சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம், 1994–ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள், மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல் ஆகும். இந்த பயிற்சி நிலையம் 2015–16–ஆம் ஆண்டில், 27 பயிற்சி வகுப்புகள் நடத்தி, 1464 நபர்களுக்கு பயிற்சியளித்துள்ளது. கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

- தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கண்டறிதல் மற்றும் அளவிடுதல்
- மாசு கட்டுப்பாடு சட்டங்கள் மற்றும் விதிகள்
- ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை
- சுற்றுச்சூழல் பொருளாதாரம்
- காற்றின் தரம் மற்றும் சுகாதாரம்
- பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை
- கழிவுநீர் சுத்திகரிப்பு
- தகவல் அறியும் உரிமைச்சட்டம்.

19.6 **அலுவலக கட்டிடங்கள் கட்டுமானம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மொத்தம் உள்ள **36** மாவட்ட அலுவலகங்களில், தற்போது **17** மாவட்ட அலுவலகங்கள் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. மீதம் உள்ள **19** மாவட்ட அலுவலகங்களில், **6** அலுவலகங்களுக்கு புதிய கட்டிடம் கட்டும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. அவையாவன:– கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, ஒரகடம், ஈரோடு, பெருந்துறை மற்றும் வாணியம்பாடி. **3** மாவட்டங்களுக்கு அதாவது திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் சேலம் ஆகிய அலுவலக கட்டிடங்களுக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை பொதுப்பணித்துறையின் மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மற்ற **9** மாவட்டங்களான திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, திருவண்ணாமலை, தேனி, நாகர்கோவில், ஊட்டி, அரியலூர், தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்ட அலுவலகங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கான நிலம் வாங்கப்பட வேண்டும். மற்றொரு மாவட்டமான, கரூர் மாவட்ட அலுவலகக் கட்டிடப் பணி, உச்சநீதி மன்ற வழக்கின் காரணமாக தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## 19.7 **பசுமை விருதுகள்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த வழிமுறைகளை மேற்கொண்டு புகை வெளியேற்றம், பசுமை போர்வை ஏற்படுத்துதல், கழிவுநீர் வெளியேற்றம், திடக்கழிவுகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மேலாண்மை போன்றவற்றில் சிறந்த தரத்தினை அடையும் தொழிற்சாலைகளுக்கு பசுமை விருதுகள் வழங்கப்படும் என **2011–2012**–ஆம் நிதி ஆண்டில் சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்யப்பட்டு, அதன்படி விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதே போல் மாவட்டத்தின் சுற்றுச்சூழலினை மேம்படுத்த சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் பசுமை விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

## **19.8 மேல்முறையீட்டு ஆணையம்**

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் **1974** –பிரிவு **28**–ன் படியும், காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் **1981** பிரிவு **31**–ன் படியும், மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எந்தவொரு நபரும், மாநில அரசினால் ஏற்படுத்தப்பட்ட மேல்முறையீட்டு ஆணையத்திடம் மேல் முறையீடு விண்ணப்பம் செய்யலாம். இதற்கென தமிழ்நாடு அரசு, ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் இரண்டு தொழில்நுட்ப

வல்லுநர்களை கொண்ட மேல்முறையீட்டு ஆணையத்தை அமைத்துள்ளது. இவ்வாணையம் எண். 51, கங்காதீஸ்வரர் கோவில் தெரு, புரசைவாக்கம், சென்னை–86 என்ற விலாசத்தில் இயங்கி வருகிறது. ஏப்ரல் 2015 முதல் ஜூன் 2016 வரை, 82 மேல்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டு அவற்றில் 26 மேல்முறையீடுகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 56 மேல்முறையீடுகள் விசாரணையில் உள்ளன.

## 19.9 **தேசிய பசுமை தீர்ப்பாயம்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வன பாதுகாப்புக்குரிய வழக்குகளை பயனுள்ளதாகவும், விரைவாகவும் முடித்து வைக்க 18.10.2010 அன்று புதுடில்லியில் தேசிய பசுமை தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. தேசிய தீர்ப்பாயம் சட்டம் 2010–ன் படி, பிரிவு 28/29 மற்றும் 33அ–படி நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974, பிரிவு 13 நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம் 1977, பிரிவு 31, காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 மற்றும் பிரிவு 5 சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986–ன்படி மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மேல்முறையீட்டு ஆணையம் பிறப்பிக்கப்பட்ட ஆணை மற்றும் முடிவுகளினால் இடருற்ற நபர்கள், மேற்கூறிய ஆணைகள் கிடைக்க பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

சென்னையில் தென் மண்டலத்திற்கான தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முதல் அமர்வு **2012**ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இரண்டாவது அமர்வு **2015**ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, இயங்கி வருகின்றது. மேற்படி தேசிய பசுமை தீர்ப்பாயம் அரும்பாக்கம், சென்னை–**106**–இல் உள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இதுவரை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்புடைய **563** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, **300** வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள **263** வழக்குகள் விசாரணையில் உள்ளன.

## 19.10 **நூலகம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நூலகம் **1989**–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இந்நூலகம் **11,421** புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைக் கொண்டுள்ளது. இந்த நூலகத்திற்கு சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட **51** இதழ்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), **10** செய்தி மடல்கள், **11** சுற்றுச்சூழல் குறித்த மாத இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. நம் நாட்டில் சுற்றுச்சூழல் சம்பந்தமான அதிக அளவிலான புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள நூலகங்களில் இதுவும் ஒன்றாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு பணியில் தொடர்புடைய அனைவரும் இதில் உறுப்பினராகலாம்.

நூலகத்தின் செயல்பாடுகளை கணிணி மயமாக்கும் வண்ணம் லிப்சிஸ் (Lib Sys) என்ற மென்பொருள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 20. வாரியத்தின் சிறப்பான செயல்பாடுகளின் சுருக்கம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான சிறந்த தொழில்நுட்பங்களை புகுத்தியும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்களை சரிவர அமல்படுத்தியும், தமிழ்நாடு மாநிலம் ஒரு நிலையான அபிவிருத்தி மாநிலமாக முன்னேற்றமடைய தொடந்து செயல்பட்டு வருகின்றது. அதன்படி மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடிற்கான பல நவீன தொழில்நுட்பங்களுக்கு ஊக்குவிப்பு அளிப்பதோடு மட்டுமல்லாமல், நிர்வாகத்திலும் பல நவீன முறைகளை புகுத்தியுள்ளது. நவீன தொழில்நுட்பங்களை அமல்படுத்துவதில் பலவற்றில், இந்தியாவில் முதன்மை மாநில வாரியம் என்ற பெருமையை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பெற்றுள்ளது. சிறு தொழிற்சாலைகளுக்கான பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உதவுவதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்ற மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களுக்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கின்றது. இந்தியாவிலேயே முதன்முறையாக பூஜ்ஜிய மாசு நிலைபாட்டை அடையக்கூடிய

முழுமையான சுத்திகரிப்பு அமைப்பினை தோல் தொழிற்சாலைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகளில் வாரியம் ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் தான் முதன் முறையாக காற்று தர கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டு, காற்றின் தன்மை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை இம்மையத்துடன் 351 தொழிற்சாலைகள் இணைக்கப்பட்டு, வருடத்தின் அனைத்து நாட்களிலும், 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. அதே போன்று நீர் தர கண்காணிப்பு மையத்தினை முதன்முதலில் ஏற்படுத்திய பெருமையும் வாரியத்தையே சாரும். மருத்துவக் கழிவுகளை முறையாக சுத்திகரித்து வெளியேற்றுவதற்கான 11 பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பினை ஏற்படுத்தி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இந்தியாவிலேயே முதன்மை வாரியமாக திகழ்கிறது.

நாட்டில் உள்ள மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தான் ஐந்து மேம்படுத்தப்பட்ட சுற்றுச் சூழல் ஆய்வகங்களுக்கு தேசிய அங்கீகாரச் சான்றிதழினை, மத்திய அரசின் தேசிய ஆய்வக அங்கீகார வாரியத்திடமிருந்து பெற்றுள்ளது. அதேபோல் நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு

நிலையத்தை முதன்முதலில் அமைத்ததும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆகும். முக்கிய நீர் நிலைகளின் தரத்தினை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் தொடர் கண்காணிப்பு நிலையங்களையும் வாரியம் ஏற்படுத்தியுள்ளது. மாசினை தடுத்திடவும், சுற்றுச்சூழல் சட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்துவதை உறுதி செய்யவும், வாரியமானது கூட்டங்கள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், பயிற்சிகள் மூலம் பங்குதாரர்களுடன் நிலையான தொடர்பில் உள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணையதளம் மூலம் இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை வசதியை அறிமுகப்படுத்தி, தொழிற்சாலைகளுக்கு இசைவாணைகளை இணையதளம் மூலம் வழங்குகின்றது. அதே போல தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மேலாண்மை செய்வதற்கான அங்கீகாரத்திற்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெற்று, இணையதளம் மூலம் அங்கீகாரங்கள் வழங்கப்படுகின்றன. மாசு சம்பந்தமான புகார்களையும் இணையதளம் மூலம் தெரிவிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. இவையெல்லாம் வாரியத்தின் மின் ஆளுமைக்கான மைல் கற்களாகும். தொழிற்சாலைகளினால் ஏற்படும் மாசினை தடுத்தும் மற்றும் கட்டுப்படுத்தியும் மாநிலத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்பினை

உறுதி செய்வதற்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிறப்பான முறையில் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். ‘‘பங்கேற்பாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, பொறுப்புள்ள மற்றும் நிலைத்தகு வளர்ச்சி காணும் மாநிலமாக திகழ செயலாற்ற வேண்டும்’’ என்ற தொலைநோக்குப் பார்வையுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

**K.C. கருப்பணன்**

அமைச்சர் – சுற்றுச்சூழல்